# தொல்காப்பியரின் மெய்ப்பாட்டியல் நோக்கில் உளவியல்



**புலவர் க.தட்சணா மூர்த்தி,**

**உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,தியாகராசர் கல்லூரி, மதுரை**

**ABSTRACT**

Of the grammar books available today "Tolkappiyam" sought its name and fame all over the world. In general, the word is the word of the subject with three powers. Book nine is divided into nine functions. In the realm of "Tolkappiyam", it is a treasury of too many news for current psychologists to wonder that like science it had described human behavior before many thousand years now commonly known as psychology. It is not a linguistic treatise but a book of didactic ethics and psychology. It deciphers the intrinsic properties of human behavior and easily visible in the external properties of modern psychology that explores. Any expression in human life is called an act. So, psychology decodes about people's actions and behaviors. It is no wonder in science but in literary treatise if factors the most; one can see the massive internal feelings and emotions of men and women in Meyppadu of "Tholkappiyam". Psychology is an academic discipline that has been developed in today's world education. In solving people's problems, the work of psychology is essential. It helps to identify the human thoughts and practices. It also pictures life. Long back, Tholkappiyar claims emotions arising in one person overlooking the other. Listening is known as the external code of „meyppadu". Psychology is the manifestation that helps us to decode such thoughts and ideas found in literature. The science of the soul psychology can reveal the events of their existence visible and apparent manifestations in terms of psychological research. This article probes such evidences from the authentic sources.

**கலைச்சொற்கள்**: தலைவி,மெய்ப்பாடுகள்,உளவியல்.தொல்காப்பியம்,உணர்ச்சி,கூற்று.

**முன்னுரை**

தமிழில் தோன்றிய முதன்மையான நூல் தொல்காப்பியம் ஆகும். இது எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளாதிகாரம் என்ற மூன்று பிரிவுகளாகவும், ஒவ்வொரு பிரிவுக்கும் ஒன்பது இயல்களாக இருபத்தேழு இயல்களைகளைக் கொண்டது. எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் மொழி பற்றிய இலக்கணமாகவும். பொருளதிகாரம் சமுதாயவியல், உடலியல், உளவியல் பற்றிய இலக்கணமாகவும் அமைந்துள்ளது. தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் ஆறாவதாக அமைந்திருப்பது மெய்ப்பாட்டியல் ஆகும். மெய்ப்பாட்டியலில் உளவியல் அறிஞர்கள் வியக்கும் வண்ணம் பல செய்திகள் அமைந்துள்ளதைக் காணமுடிகிறது. மனித நடத்தையைப் பற்றி விரித்துரைக்கும் அறிவியலே உளவியல் ஆகும். மனித நடத்தையின் உள்ளார்ந்த பண்புகளையும் மற்றும் எளிதில் புலப்படக்கூடிய வெளிப்புறப் பண்புகளையும் ஆய்கிறது. உளவியல் என்பது மக்களின் செயல்கள் மற்றும் நடத்தைகள் உள்ளத்திறன் பற்றி அறிய உதவும் ஓர் அறிவியல் ஆகும். மக்களின் சிக்கல்களைத் தீர்த்து வைப்பதில்

உளவியலின் பணி இன்றியமையாததாக அமைகின்றது.மனித மனங்களில் உள்ள எண்ணங்கள், செயல்முறைகள், நடைமுறைகள் ஆகியவற்றை அறிந்து கொள்ள உளவியல் பெரிதும் பயன்படுகின்றது. இலக்கியத்துக்கும் உளவியலுக்கும் நெருங்கிய தொடர்புண்டு. மனிதர்களின் வாழ்க்கையை படம்பிடித்துக் காட்டுவதில் மிக முக்கியப் பங்கு வகிப்பது இலக்கியமாகும். எனவே, தொல்காப்பயர் கூறும் மெய்ப்பாடுகளில் மனிதன் உள்ளத்தில் தோன்றும் உணர்ச்சிகளை மற்றவர்கள் பார்த்தும், கேட்கும் அறியப் புறவயக் குறிப்பால் புலப்படுபவையே மெய்ப்பாடாகும். அம்மெய்ப்பாடுகளையும் உளவியலாளர் உள்ளக் கிளர்ச்சிகள் என்றும் குறிப்பிடுகின்றனர். உள்ளத்தைப் பற்றிய அறிவியல் உளவியல் என்பதால் குறுந்தொகையில் உள்ள தலைவியின் உள்ளத்தில் வெளிப்படக் கூடிய மெய்ப்பாடுகளை உளவியல் நோக்கில் ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

மெய்ப்பாடு விளக்கம்:-

தொல்காப்பியர் ஒருவரின் உடல் வேறுபாடறிந்து மற்றவர் ஒழுக வேண்டிய திறப்பாடு பற்றியே மெய்ப்பாடடியலை அமைத்துள்ளார். மேலும், செய்யுள் உறுப்புகளில் ஒன்றான மெய்ப்பாட்டை,

“ உய்த்துணர் வின்றித் தலைவரு பொருண்மையின்
மெய்ப்பட முடிவது மெய்ப்பாடாகும்”1 என்று கூறுகிறார்.

“மெய்யின்கண் தோன்றுதலின் மெய்ப்பாடாயிற்று”2 என்கிறார் இளம்பூரணர்.

மெய்ப்பாடென்பது “பொருட்பாடு உலகத்தார் உள்ள நிகழ்ச்சி ஆண்டு நிகழ்ந்தவாறே புறந்தார்க்குப் புலப்படுவதோர் ஆற்றான் வெளிப்படுதல் மெய்ப்பாடாகும்.3 என்கிறார் பேராசிரியர்.

“உலகத்தாரது உள்ள நிகழ்ச்சி ஆண்டு அவரது உடம்பின்கண் தோன்றும் கண்ணீரும்பல், மெய்மயிர் சிலிர்த்தல் வியர்த்தல், நடுக்கம் முதலிய புறக்குறிகளால் காண்போர்க்குப் புலனாகுந்தன்மை மெய்ப்பாடு எனப்படும்”4 என்கின்றார் க.வெள்ளைவாரணர்.

“ மெய்ப்பாடு என்பது மனிதனின் உள நடத்தை உள இயக்கங்கள் பற்றியதாகும்”5 என்பார் எம்.இராசமாணிக்கம்.

மெய்ப்பாட்டை பேராசிரியர், புலப்பாடு என்றே குறிப்பிடுகின்றார். உள்ளத்தில் உள்ளே நிகழும் செயல்களைவெளிப்படுத்துதல் என்றால், அவ்உணர்வுகளுக்கு எழுத்தாலும் சொல்லாலும், பொருளாலும், தொடராலும் ஒரு உருவம் கொடுத்தும் புறத்தே காண்பர். அதனை மனக்கண்ணால் காணுமாறு படைத்தலாகும்.

அதனை

“ கண்ணிலும் செவியினும் திண்ணத்தின் உணரும்
உணர்வுடை மாந்தர்க்கு அல்லது தெரியின்
நன்னயப் பொருள்கோள் எண்ணருங் குரைத்தே”6

என்ற நூற்பா விளக்குகின்றது. தொல்காப்பியர் கூற்றின்படி மனத்தலும் உடலாலும் வெளிப்படுவது மெய்ப்பாடு ஆகும்.

எண்வகை மெய்ப்பாடுகள் :-

“நகை அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகை என்று



Bharath Institute of Higher Education And Research
பாரத் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,கலை மற்றும் அறிவியல் புலம்,தமிழ்த்துறை
பன்னாட்டு ஆய்வுக்கருத்தரங்கம்
"தமிழ் இலக்கியங்களில் உலக இலக்கியச் சிந்தனைகள்"
பிரணவ் தமிழ் மின்னியல் ஆய்விதழ் சென்னை volume:1 Issue:3 October 2022.
ISSN:2582-9599

அப்பால் எட்டே மெய்ப்பாடு என்ப”7

என்ற நூற்பாவின் வழி தொல்காப்பியர் எண்வகை மெய்ப்பாடுகளைக் குறிப்படுகின்றார். மேலும்,

“பண்ணைத் தோன்றிய எண்நான்கு பொருளும்
கண்ணிய புறனே நால்நான்கு என்ப”8

என்ற நூற்பாவின் வழி எண்வகை மெய்ப்பாடுகள் ஒவ்வொன்றுக்கும் நான்கு நான்கு பொருள்களை நிலைக்களன்களாக அதாவது (8X4=32) பொருள்களில் வந்து உணர்ச்சிகளை வெளிப்படுகின்றது என்று தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார்.

மெய்ப்பாடுகள் குறித்து பிற இலக்கண நூல்கள் :-

தண்டியலங்காரம்:-

“நெருங்கிய சுவையும் பாவமும் விரும்பக்
கற்றோர் புனையும் பெற்றிய தென்ப”9

என்ற பாவின்வழி, எடடு வகைப்பட்ட சுவையும், மெய்ப்பாட்டுக் குறிப்பும் இடைவிடாமல் கேட்போர் மதிக்கத்தக்க வகையில் புலவரால் புனையப்படுதல் பெருங்காப்பியம் என்று தண்டியாசிரியர் குறிப்பிடுகிறார். மேலும்,

“ உண்ணிகழ் தன்மை புறந்துத் தோன்ற
எண்வகை மெய்ப்பாட்டின் இயல்வது சுவையே “

எட்டு வகைப்பட்ட மெய்ப்பாட்டானும் நடப்பது சுவை – என்றும் அலங்காரம் என்று தண்டியாசிரியர் குறிப்பிடுகிறன்றார்.

எட்டுவகை மெய்ப்பாடுகள் எவை என்பதை

“ அவைதாம்
வீரம் அச்சம் இழிப்பு வியப்பு
காமம், அவலம் உருத்திரம் நகை”

என்று தண்டியாசிரியர் குறிப்பிடுகிறார்.

இவற்றை

| தொல்காப்பியம் | தண்டியலங்காரம் |
|---|---|
| நகை | நகை |
| அழுகை | அவலம் |
| இளிவரல் | இழிப்பு |
| மருட்கை | வியப்பு |
| அச்சம் | அச்சம் |
| வெகுளி | உருத்திரம் |
| பெருமிதம் | வீரம் |

| | |
|---|---|
| உவகை | காமம் |

என வகைப்படுத்தப்பட்டுள்ளது.

தொல்காப்பிய மெய்ப்பாட்டிற்கான நிலைக்களன்கள் குறித்து விரிவாக தண்டியாசிரியர் பேசவில்லை. இதில் இரண்டு நூலிலும் மெய்ப்பாடுகள் செய்யுள் உறுப்புகளாகக் கூறப்பட்டுள்ளன. வடமொழியை அடியொற்றி தண்டி எழுதப்பட்டாலும் 'சாந்தம்' எனும் மெய்ப்பாட்டினைத் தவிர்த்து மெய்ப்பாடுகள் எட்டு எனத் தொல்காப்பியத்தை அடியொற்றியே குறிப்பிடப்பட்டுள்ளதை அறிய முடிகிறது.

வீரசோழியம்:-

மெய்ப்பாடு என்பது கண்டது போலத் தோன்றும் கருத்தாகும். இவை நாட்டியம், காப்பியம், செய்கைத்திறன், சொல்திறன், வாசைன ஆகியவை தம்மவையே போல அனுபவ நிலையில் வந்து ஆனந்தமாக நிற்பன. என்கிறார் புத்தமித்தரர்.

முத்துவீரியம்:-

எட்டுவகை மெய்ப்பாடுகளாகவும், சுவையணி பிறக்கும். என்பதை

" அவைதாம்
அச்சம் வீரம் அவலம் காமம்
இழிப்பும் வியப்பு மெழில்படு நகையும்
உருத்திரமும் மென வுரைக்கப்படுமே"11

இந்நூற்பாவின்வழி எட்டுவகைச் சுவைகள் குறிப்பிடப்படுவதைக் காணமுடிகிறது.

மாறனலங்காரம்:-

தொல்காப்பியத்தைப் போலவே மாறனலங்காரமும் மெய்ப்பாட்டில் தோன்றுகிற சுவை எட்டு எனக் குறிப்பிடுகின்றது.

"பொறியுணர் வொடுமொரு பொருளினை யெதிர்ந்த
நெறியுடை மனத்துணி கழ்தரும் பான்மை
யலவருறப்புறத் தாய்ப் பொருளெட்டி
ணியல்வது சுவையென்றியம்பினர் புலவர்"12

என்ற நூற்பாவின்வழி இந்திரியங்களின் அறிவினொடும் யாதானுமொரு பொருளைக் காணப்பட்ட மனத்துள் அப்பொருளுக்கு ஏதுவாக நிகழ்ந்ததை நிகழ்ந்தவாறே புறந்தார்க்கும் புலப்படுமாறு வெளிப்பட மெய்ப்பாடுகள் எட்டால் தோனறுவது சுவையென்னும் அலங்காரம் என்று விளக்கம் தருகிறது.

சுவைகள் எட்டு என்பதை

"அவைதாம்
பெருமத நகுக்க மழுகை யிளிவர
லுருத்திர நகை வியப்பு வகை யென்றாகும்"13



Bharath Institute of Higher Education And Research
பாரத் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,கலை மற்றும் அறிவியல் புலம்,தமிழ்த்துறை
பன்னாட்டு ஆய்வுக்கருத்தரங்கம்
"தமிழ் இலக்கியங்களில் உலக இலக்கியச் சிந்தனைகள்"
பிரணவ் தமிழ் மின்னியல் ஆய்விதழ் சென்னை volume:1 Issue:3 October 2022.
ISSN:2582-9599

என்று மெய்ப்பாடுகளின் எண்ணிக்கையைக் குறிப்பிடுகின்றது. தொல்காப்பியர் கூறும் மருட்கையை வியப்பு என்றும் அச்சத்தை நடுக்கம் என்றும் வெகுளியை உருத்திரம் என்றும் குறிப்பிடப்படுவதைக் காணமுடிகிறது.

வடநூலார் கருத்து:-

வடமொழி இலக்கணமும் சுவைகளின் இயல்பினை எடுத்து இயம்புகிறது. ஒருவர் உள்ளத்தில் எழும் உளவேறு பாவம் எனப்படும். இத்தகைய பாவங்களுக்கு நல்லறிஞர் உள்ளத்தில் உண்டாகும் பிரதிபிம்பமே 'ரஸம்' எனப்படும். ரஸம் ஒன்பது வகையாகும்.

அவையாவன

| தமிழ் | வடமொழி |
|---|---|
| நகை | ஹாஸ்யம் |
| அழுகை | கருணம் |
| இளிவரல் | பீபத்ஸம் |
| மருட்கை | அற்புதம் |
| அச்சம் | பயானகம் |
| உவகை | சிருங்காரம் |
| வெகுளி | ரௌத்திரம் |
| பெருமிதம் | வீரம் |
| நடுவுநிலை | சாந்தம் |

தொல்காப்பியர் பாவத்திற்குரிய பெயரையை சுவைக்கும் கூறியுள்ளார்.

குறுந்தொகை தலைவி கூற்றில் மெய்ப்பாடுகளில் உள்ள உளவியல்:-

எல்லா அக இலக்கியங்களிலும் பெரும்பாலும் தோழி கூற்றுதான் மிகுதியாகக் காணப்படுகின்றன.ஆனால் குறுந்தொகையில் மட்டும்தான் தலைவி கூற்று மிகுதியாக உள்ளது.

நகை பற்றிய மெய்ப்பாடு:-

நகை என்பது மெய்ப்பாடு இகழ்ச்சியில் பிறப்பதாகும். அதாவது முறுவலித்துச் சிரித்தல் அளவாகச் சிரித்தல் பெருகச் சிரித்தல் என மூன்று வகைப்படும். இதனை தொல்காப்பியர்,

“எள்ளல் இளமை பேதை மடனென்

உளப்பட நகை நான்கே”14

என்கிறார். நகை என்றால் சிரித்தல் மகிழ்தல் எனப் பொருள்படும். தொல்காப்பியர் கூற்றுப்படி எள்ளல், இளமைஈ பேதைமை மடன் போன்றவை நான்கு நிலை களன்களில் நகையாது வெளிப்படும் என்று தொல்காப்பியர் குறிப்பிடுகிறார்.

தலைவி தன் தலைவனை நோக்கி ‘ நீ கூறியதை மெய்யாகக் கொண்டு யான் மகிழ்ந்தேனே உன் கூற்று பொய்யாதலை எனது மடமையால் அறியாமல் இருந்தது நகைத்தானே அங்ஙனம் நகைத்த என் பற்கள் அழிவனவாக என வெறுத்துக் கூறுகின்றாள்.

சுரஞ்சொல் யானைக் கல்உறு கோட்டின்
தெற்றென இறீ இயரோ ஐய மற்றுயாம்
நும்மொடு நக்க வால்வெள் எயிறே”15

என்ற பாடல் வழி தலைவி தன் மடத்தால் தலைவன் உரையை உண்மையெனக் கருதி  நகைத்த நகையினை இதன்வழி அறிய முடிகிறது.

**நகை மெய்ப்பாடும்  மன எழுச்சியும்:-**

தொல்காப்பியரின் கூற்றுப்படி, நகை என்பது மகிழ்ச்சியாகும். மகிழ்ச்சிக்கு அடிப்படையாக அமைவது மனஎழுச்சி அமைகின்றது என்று உளவியல் அறிஞர்கள் கருதுகின்றனர். இது பிறப்பிலிருந்தே ஏற்படுகின்றது என்றும் தன் தேவைகளை பூர்த்தி செய்யும்போது மகிழ்ச்சி ஏற்படும் என்று கெவிகட்ஸ் என்ற உளவியல் இறிஞர் கூறுகின்றார். மகிழ்ச்சியானர் மனிதர்களின் வாழ்வில் முக்கிய உணர்ச்சிகளாக வெளிப்படுவதை அறிய முடிகிறது.

அழுகை:-

அழுகை எனபது அவலத்தில் பிறப்பது ஆகும்.தனக்குத் துன்பம் ஏறபடும் போது ஏற்படும் அழுகை என்றும் பிறர் துன்பம் கண்டு ஏற்படும் அழுகை என்றும் இரண்டாகப் பிரிக்கலாம்.இலக்கியச் சுவைகளிலே மக்கள் உள்ளத்தை விரைவில் கவரவல்லது அழுகைச் சுவையே ஆகும். இதற்கு மனிதர் உள்ளத்தில் இயற்கையாகப் பொதிந்திருக்கும் இரக்க உணர்ச்சியை எளிதில் இருப்பதே இதற்கு காரணமாகும்.

“இளிவே இழவு அசைவே வறுமையென
விளிவில் கொள்கை அழுகை நான்கே”16

என்ற தொல்காப்பிய நூற்பா வழி அழுகை என்னும் மெய்ப்பாடு பிறக்கும் இடங்களை விளக்குகின்றது. இளிவு, இழவு, அசைவு, வறுமை என்னும் நான்கின் காரணமாக அழுகை பிறக்கின்றது.

“ நள்ளென் றன்றே யாமம் சொல்லவிந்
தினி தடங்கினரே மாக்கள் முனிவின்று

நனந்தலை உலகமும் துஞ்சும்

ஓர்யான் மன்ற துஞ்சா தேனே”

என்ற பாடலடிகளின் வழி தலைவி தோழியிடம் யான் தலைவனைப் பிரிந்திருந்தலால் என்னால் தூங்க முடியவில்லை. நள்ளிரவில் அனைவரும் உறங்கிய பிறகும் தான் மட்டும் தூங்க முடியாமல் பட்ட துன்பத்தின் வாயிலாக அசைவு என்னும் அழுகை மெய்;ப்பாடு தோன்றுவது புலனாகின்றது.

**அழுகை மெய்ப்பாடும் - மனநலமும் உடல்நலமும் ஒப்பீடு:-**

ஒருவனுக்கு மனநலமும் உடல்நலமும் குன்றியிருக்கும்போது, அழுகையானது ஏற்படும் என்று ஹேட்பீல்டு கூறுகிறார். மனநலம், உடல்நலம் குன்றியவர்கள் தனது பொருள், உடைமை, தளர்ச்சி, வறுமை இவற்றை இழந்து நிற்கும் போது அழுகையானது ஏற்படும் என்றும் கூறுகின்றார்.

இளிவரல் பற்றிய மெய்ப்பாடு:-

இளிவரல் என்பது பிறரால் இகழப்படுவது ஆகும். மானம் குன்ற வரும் தாழ்வு நாணத்தக்க செய்கைகளால் இச்சுவைப் பிறக்கிறது. இந்த உணர்வின் வெளிப்பாட்டைத் தொல்காப்பியர் இளிவரல் என்று குறிப்பிடுகின்றார். இதைப் பற்றித் தொல்காப்பியர்

“மூப்பே பிணியே வருத்தம் மென்மையோடு

யாப்புற வந்த இளிவரல் நான்கே”17

என்ற நூற்பா இளிவரல் பற்றிய நிலைகளன்களான மூப்பு, பிணி, வருத்தல், மென்மை ஆகிய நான்கினைக் குறிப்பிடுகிறது.

தலைவி தலைவியை இரவுக்குறியில் சந்திக்கச் செல்லும் போது பல சிக்கல்கள் தலைவிக்கு ஏற்படும். பல சிக்கல்களையும் கடந்து தலைவனைப் பார்க்கச் செல்லும் போதும் தலைவன் இல்லாததால் தலைவி ஏமாற்றம் அடைந்து தலைவனை நினைத்து வருத்தம் அடைவதாக இப்பாடல் அமைகின்றது.

”பூ இடைப்படினும் யாண்டு இழிந்தன்ன

நீர்உறை மகன்றிற் புணர்ச்சிபோலப்

பிரிவு அரிது ஆகிய தண்டாக் காமமொடு

உடன்உயிர் போகுகதில்லை கடன் அறிந்து

இருவேம் ஆகிய உலகத்து”18 -

என்ற பாடல் அடிகளில் தலைவி தன் தலைவனைப் பார்க்க முடியாமல் போகவே தலைவனை நினைத்து வருத்தம் அடைவதன் வாயிலாக இளிவரல் மெய்ப்பாடு தோன்றுவதைக் காணமுடிகிறது.

இளிவரல் மெய்ப்பாடும் மனித வளர்ச்சியும் ஒப்பீடு:-

ஒருவனது வளர்ச்சியையும், நடத்தையையும் அவனுக்கு புறத்தே இருந்து கட்டுப்படுத்தும் ஏதுக்கள், அந்த நபரின் சூழ்நிலை என்று வாட்சன் கூறுகிறார். பிறப்பிலிருந்து இறப்பு வரை உடம்பில் பல்வேறு மாற்றங்கள் ஏற்படுவதற்கு மரபு மற்றும் சூழல் காரணமாக அமைகின்றன. இதனால் உடல் மற்றும் உள்ள இயக்க ஆற்றலானது மாற்றம் பெறுகின்றன. பெற்றோர்களிடமிருந்தே வழிவழியாகத் தோன்றும் உடல் மற்றும் உளப் பண்புகள்

சந்ததியருக்கு ஜீன்கள் மூலமாக அனுப்பப்படுகிறது என்று கிரிகோர் மெண்டல் கூறுகிறார். இவர்கள் கூற்றுப்படி, உடல் மற்றும் உள்ள வளர்ச்சிக்கு ஏற்றவாறு மூப்பு, பிணி வறுத்தம், மென்மை போன்றவை ஏற்படுவதை இதன்மூலம் அறியமுடிகிறது.

**மருட்கை பற்றிய மெய்ப்பாடு:-**

இது வியப்புச் சுவையாகும். என்றுமே நடந்திராத நடக்க முடியாத இயற்கைக்குப் புறம்பான நிகழ்ச்சிகள் நிகழும்போது இச்சுவை பிறக்கிறது. இதன் இயல்பை தொல்காப்பியர்,

"புதுமை பெருமை சிறுமை ஆக்மொடு
மதிமை சாலா மருட்கை நான்கே"19

என்ற நூற்பாவின் வழி மருட்கை என்றும் மெய்ப்பாடு புதமை பெரமை சிறுமை ஆக்கம் என்னும் நான்கு நிலைகளில் பிறக்கும் என்கிறார் தொல்காப்பியர்.

தலைவி தோழியிடம் தலைவன் மீது கொண்டுள்ள நட்பினையும், அந்த நட்பு பூமியைக் காட்டிலும் அகலமானது என்றும், ஆகாயத்தைக் காட்டிலும் உயர்ந்தது என்றும் கடலைக் காட்டிலும் ஆழமானது என்றும் கூறுகிறார்.

"நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று
நீரினும் ஆரளவின்றே சாரல்
கருங்கோற் குறிஞ்சி பூக்கொண்டு
பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே"20

என்ற பாடலடிகளின்வழி தலைவி தன் தலைவன் மீது கொண்டுள்ள காதலை பூமியைக் காட்டிலும் அகலமாகவும் ஆகாயத்தைக் காட்டிலும் உயர்ந்ததாகவும், கடலைக் காட்டிலும் ஆழமானது என்று கூறுவதன்வழி தலைவிக்கு தன்கண் தோன்றிய பெருமை என்றும் மெய்ப்பாட்டை அறிய முடிகிறது.

மருட்கை மெய்ப்பாடும் ஆக்கத்திறனும் ஒப்பீடு:-

நுண்திறமைக்கொண்ட கிரகாம்வாலஸ், கில்பெர்ட் இவர்களின் கூற்றுப்படி, ஒப்புநோக்கும்போது, புதுமை, உருவாக்கல், பெருமை கொள்ளல், நுண்ணறிவு மிக்கோர் புதியனப் படைத்தல் மருட்கையின் அறிவுப்பெற்றோர்களாக விளங்குவார்கள்.

**அச்சம் பற்றிய மெய்ப்பாடு:-**

அச்சம் என்னும் மெய்ப்பாடு பயத்தின் காரணமாகத் தோன்றுபவை ஆகும். மனித இனத்தில் அச்சம் என்பது அவரவர் மனத்துளிவிற்கேற்ப ஏற்படினும் பொதுவாக எல்லா மாந்தர்களிடமும் அவ்உணர்ச்சி ஒரு வகையில் அமைந்திருப்பதைக் காணமுடிகிறது. அச்சத்தின் இயல்பினைத் தொல்காப்பியர்,

''அணங்கே விலங்கே கள்ளர்தம் இறையெனப்
பிணங்கல் சாவா அச்சம் நான்கே"21

அணங்கு என்பவை எதிர்ப்பட்டாரை வருத்தும் சிறுதெய்வம், பூதம் பேய், பாம்பு போல்வன . விலங்கு என்பது வேங்கை பாம்பு ,புலி ,யானை முதலிய கொடிய விலங்கள் போல்வன.கள்வர் என்பவர் கொலை செய்தும்



Bharath Institute of Higher Education And Research
பாரத் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,கலை மற்றும் அறிவியல் புலம்,தமிழ்த்துறை
பன்னாட்டு ஆய்வுக்கருத்தரங்கம்
"தமிழ் இலக்கியங்களில் உலக இலக்கியச் சிந்தனைகள்"
பிரணவ் தமிழ் மின்னியல் ஆய்விதழ் சென்னை volume:1 Issue:3 October 2022.
ISSN:2582-9599

கொடுந்தொழில் புரிந்தும் பிறர் பொருள் கவர்பவர் போல்வன. இறை எனப்படுவோர் தந்தை ஆசரியர், அரசன் வழிபடு தெய்வம் ஆகியோர் என்று குறிப்பிடுகின்றார்.

“ மன்ற மராஅத்த பேஎழுதிர் கடவுள்

கொடியோர்த் தெறுஉ மென்ப யாவதும்

கொடிய ரல்லரெங் குன்ற கெழு நாடார்

பசைஇப் பசந்தன்று நுதவே

நெகிழ்ந்தன்று தடமென்றோளே”22

என்ற பாடல் அடிகளின் வழி தலைவன் கடம்பு மரத்தில் வாழும் தெய்வத்தின் மீது உன்னை என்றும் பிரியமாட்டேன் என்று சூளுரை செய்தான். பின்னர் பொருள் தேடுவதற்காகப் பிரிந்து சென்றான். பிரிந்து செல்லமாட்டேன் என்று சூளுரைத்துப் பிரிந்து சென்றதால் அந்தத் தெய்வம் தன் தலைவனைத் தண்டிக்குமோ என்று அஞ்சுவதன் வழி தலcவிக்கு அச்சம் மெய்ப்பாடு தோன்றுவதை அறிய முடிகிறது.

அச்சம் மெய்ப்பாடும் மனவெழுச்சியும் ஒப்பீடு:-

அச்சம் என்பது பிறப்பிலிருந்தே தோன்றக்கூடிய மனவெழுச்சி என்றும், இது மற்றவர்களால் ஏற்படும் என்றும் கெவிகட்ஸ் கூறுகிறார். மேலும், அச்சத்தைத் தவிர்க்க விழிப்புடன் இருக்க வேண்டும் என்றும், தன்னம்பிக்கை காப்புணர்ச்சி தன்திறனை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்றும் கூறுகிறார்.

உவகைப் பற்றிய மெய்ப்பாடு:-

உவகை என்னும் மெய்ப்பாடு காமத்தில் பிறப்பது ஆகும். மகிழ்ச்சியாகிய மெய்ப்பாடு உவகை என்றும் கூறப்படும். நகை வேறு, உவகை வேறு ஆகும். இன்ப நிகழ்ச்சிகளால் உவகைப் பிறக்கும். ஆனல் தொல்காப்பியர் இதனை

''செல்வம் புலனே புணர்வு விளையாட்டென

அல்லல் நீத்த உவகை நான்கே”23

என்ற நூற்பாவில் விளக்குகின்றார். இவற்றில் செல்வம் என்பது செல்வத்தால் உளதாகும் நுகர்ச்சி ஆகும். புலன் என்பது புலமையில் ஏற்படும் அறிவு முதிர்ச்சியையும், கல்விப்பயனாகிய அறிவுடைமையையும் குறிக்கின்றது. புணர்வு என்பது அன்போடு புணர்ந்த ஐந்திணைக் காமப்புணர்ச்சி ஆகும்.விளையாட்டு என்பது மலை, ஆறு, குளம் முதலிய இயற்கை வனப்புமிக்க இடங்களில் தங்கி துணையோடு விளையாடுவதைக் குறிக்கும்.

''மட்டம் பெய்த மணிகலத்து அன்ன

இட்டுவாய்ச் சுனைய பகுவாய்த் தேரை

தட்டைப் பறையின் கறங்கு நாடன்

தொல்லைத் திங்கள் நெடு வெண்ணிலவின்

மணந்தனன் மன் எம் தோனே

இன்று முல்லை முகை நாறுமே”



Bharath Institute of Higher Education And Research
பாரத் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,கலை மற்றும் அறிவியல் புலம்,தமிழ்த்துறை
பன்னாட்டு ஆய்வுக்கருத்தரங்கம்
"தமிழ் இலக்கியங்களில் உலக இலக்கியச் சிந்தனைகள்"
பிரணவ் தமிழ் மின்னியல் ஆய்விதழ் சென்னை volume:1 Issue:3 October 2022.
ISSN:2582-9599

இப்பாடலின் வழி தலைவி தோழியிடம் தலைவன் புணர்ந்த பொது அவன் மேனியில் இருந்த முல்லை மொட்டுகளின் நறுமணம் இன்னும் தன் தோள்களில் வீசுகிறது என்று கூறப்படுவதால் இது புணர்வு காரணமாக பிறந்த உவகையாகும்.

**உவகையும் மெய்ப்பாடும் புலனும் ஒப்பீடு:-**

புலன்கள் தூணடப்படும்போது அவ்வுறுப்பின் வாயிலாக நமகு ஏற்படுவது புலன் உணர்வுகள் என்றும் இவ்வுணர்கள் எவற்றின் மீது அதிக ஆதிக்கம் செலுத்துகின்றதோ அதனுடைய தாக்கம் அதிகமாக இருக்கும் என்று பியாஜெ, வெர்னர் கூறுகின்றனர்.

வெகுளி பற்றிய மெய்ப்பாடு:-

வெகுளி என்பதற்கு சினம் என்பது பொருள். அதன் இயல்பினை தொல்காப்பியர்,

“உறுப்பறை குடிகோள் அலை கொலை என்ற
வெறுப்பின் வந்த வெகுளி நான்கே”24

என்ற நூற்பாவில் விளக்குகின்றார். இதில் உறுப்பறை என்பது உறுப்பைக் குறைத்தல், குடிகோள் என்பது பிறரது குடிப்பிறப்பின் உயர்வுக்கும், அவர்களுடைய சுற்றத்தார்க்கும் கேடு சூழ்தல் அலை என்பது கோல் கொண்டு அடித்தல், வருந்துதல் கொலை என்பது பிறருடைய அறிவு, புகழ் முதலிய நன்மைகளை அழித்துப் பேசுதல் என்பது ஆகும்.

''நன்னலந் தொலைய நலமிகச் சாஅய்
இன்னுயிர் கழியினும் உரைய லவர் நமக்கு
அன்னையும் அத்தனும் அல்லரோ தோழி
புலவியஃ தெவனோ அன்பிலங்கடையே”

என்ற பாடலடிகளின்வழி தலைவி தோழியிடம் என் தலைவனை தாயைப் போலவும் தந்தையைப் போலவும் மதிக்க வேண்டும் என்று எண்ணுகிறேன். ஆனால் தலைவன் என்னைப் பிரிந்துப் பரந்தமையோடு சென்று வாழ்ந்து வருகிறான். இதனால் எனக்கு அவரோடு கூட வேண்டும் என்ற எண்ணம் இல்லை. அவன் மீது கோபமே வருகிறது என்று எண்ணி வருந்துவதன் வழி இது அலை காரணமாக பிறந்த வெகுளியாகும்.

வெகுளி மெய்ப்பாடும், மனமுறிவு மனப்போராட்டம் மனநோய் ஒப்பீடு:-

மனமுறிவு ஒருவரது உள்ளத்தில் பய உணர்வையும், குற்ற உணர்ச்சியையும் ஏற்படுத்துகின்றது என்றும், கவலையும் துயரையும் மனப்போராட்டத்தை உருவாக்குகிறது என்றும், உடலுக்கு நோய் வருவது போல மனப்போராட்டங்களாலும், மனமுறிவுகளாலும், மனத்திற்கு நோய் வருகின்றது என்று மார்க், கிங் என்ற உளவியல் அறிஞர்கள் கூறுகின்றனர்.

**முடிவுரை:-**

மெய்யின்கண் தோன்றிய உணர்வு பிறர்க்குப் புலப்படும் வகையில் புலனாவது மெய்ப்பாடாகும். மனித மூளையின் வளர்;ச்சியானது அன்றாடம் நடக்கக்கூடிய சமூக நிகழ்வுகளை உள்வாங்கிப் புதுப்பித்துக் கொள்கின்றது.

தொல்காப்பியர் முதல் மெய்ப்பாடாக நகைச்சுவை வைத்ததின் வாயிலாக அளவின் முதிர்ந்த உளவியல் திறனை அறியமுடிகின்றது.

இவ்வகையில், தொல்காப்பியரின் உளவியல் ஆளுமையினை ஒப்பு நோக்கும் போது அவர் எண்வகை மெய்ப்பாட்டினை வைத்த விதத்தினை வைத்தே அறிந்து கொள்ள முடிகின்றது.

அதுமட்டுமல்லாது குறுந்தொகையில் தலைவி கூற்றில் காணப்படும் மெய்ப்பாடுகள் பற்றிய செய்திகளையும் இக்கட்டுரையின்வழி அறிய முடிந்தது.

**அடிக்குறிப்புகள்:**

1. தொல்.பொருள்.செய்யுள். நூல் 169.
2. இளம்பூரணர் (உ.ஆ) தொல்.பொருள் பகுதி -3 ப – 4
3. பேராசிரியர் (உ.ஆ) தொல் பொருள் ப-1
4. க. வெள்ளைவாரணர் (உ.ஆ) தொல் மெய் க். உரு
5. எம்.இராசமாணிக்கம் (ப.ஆ) உளவியல் பக் 4-6
6. இளம்பூரணனார் (உ.ஆ) தொல்.பொருள். பக் – 374
7. இளம்பூரணனார் (உ.ஆ) தொல்.பொருள். பக் 347
8. தண்டி பொதுவணியியல் பா 8
9. தண்டி பொதுவணியியல் பா 18
10. தண்டி பொருளணியியல் பா 19
11. முத்துவீரியம் அணியதிகாரம் பா க உ ச உ
12. மாறனலங்காரம் பொருளணியியலுரை பா 197
13. மேலது பா198
14. தொல் பொருள் மெய்ப் நூ 4
15. ச.வே.சு குறுந்தொகை தெளிவுரை ப 132
16. மு.கருணாநிதி தொல்காப்பியப் பூங்கா ப.417
17. தொல் பொருள் மெய்ப் நூ 6
18. மு.சண்முகம்பிள்ளை (ப.ஆ) குறுந்தொகை மூலமும் உரையும் பக் 58-59
19. தொல் பொருள் மெய்ப் நூ 7
20. துரை.தண்டபாணி குறுந்தொகை தெளிவுரை ப 39
21. தொல் பொருள் மெய்ப் நூ 6
22. மு.சண்முகம்பிள்ளை (ப.ஆ) குறுந்தொகை மூலமும் உரையும் பக் 84
23. தொல் பொருள் மெய்ப் நூ 8
24. தொல் பொருள் மெய்ப் நூ 11

**பார்வை நூல்கள்:**

1)அப்துல்கரிம்,இளையோர்உளவியல்,தமிழ்நாடுப் பாடநூல் நிறுவனம்,சென்னை.மு.ப 1975

2)இளம்பூரணர் (உ.ஆ),தொல்காப்பியம் பொருளதிகாரம் (பகுதி-3) கழக வெளியீடு, சென்னை மு.ப.2001.

3)கருணாநிதி.மு, தொல்காப்பியப் பூங்கா,தமிழ்கனி பதிப்பகம்,சென்னை,2003.

4)சண்முகம் பிள்ளை,மு.(ப.ஆ),குறுந்தொகை மூலமும் உரையும்,தமிழ்ப் பல்கலைக்கழகம்,தஞ்சாவூர்,மு.ப.1994

5)சுப்பிரமணியன்,ச.வே, குறுந்தொகை தெளிவுரை,மெய்யப்பன் பதிப்பகம்,சிதம்பரம்.மு.ப.2009

5)தண்டபாணி,துரை.,குறுந்தொகை தெளிவுரை,உமா பதிப்பகம்,சென்னை,மு.ப.2001.